# செய்திகளும் குறிப்புகளும்

**02.05.2024, ஆரோவில்வாசிகளுக்கான தமிழ் வார ஏடு, ஆரோட்ரடுக்ஷன், எண்: 1054**

---

**ஸ்ரீ அரவிந்தர் - மனித சக்கரம்** (Human cycle)
**15. பகுத்தறிவு கடந்த நலம்.**

ஒரு செயலின் அல்லது செயலுடைய போக்கின் முழுமையான நீதியை, முழுமையான நேர்மையை, முழுமையான தூய்மையை, அன்பை அல்லது தன்னலமின்மையை, வெளிப்புறக் காரணங்களைக் கொண்டு நியாயப்படுத்துவது கடினமானது, இயலாததும் கூட; ஏனென்றால் செயல் எப்போதும் ஒன்றுக்கொன்று சார்புடையது, அது கலப்புடையது மற்றும் அதன் விளைவுகளில் நிச்சயமற்றது. அதனுடைய வாய்ப்புகளில் குழப்பமானது. ஆனால், உள்ஜீவனை நித்தியமான முழுமையான நன்மையுடன் தொடர்புகொள்ளச் செய்யமுடியும், நமது உணர்வையும் விருப்பாற்றலையும் நித்தியமான நன்மையால் நிரப்பமுடியும், அதன் விளைவாக அதன் உள்ளுந்துதல்கள் அல்லது நேர்காணல்கள் மற்றும் அகவெழுச்சிகளிலிருந்து செயல்படமுடியும். அதை அடையத்தான் நன்னெறி இருப்பு கடும் முயற்சி செய்கிறது, மேலும் உயர்ந்த நன்னெறி மனிதன் தன்னுடைய உள்ளார்ந்த முயற்சியால் அதை மேலும் மேலும் அதிகமாக அடைகிறான்.

உண்மையில் நன்னெறி என்பது அதன் சாரத்தில், செயற்பாட்டில் நன்மை தீமைகளுக்கான ஒரு கணிப்போ அல்லது உலக மதிப்பீட்டின்படி குற்றமற்றவனாக இருப்பதற்கான ஒரு கடும் முயற்சியோ அல்ல அவை செப்பமுறாத புறத்தோற்றங்கள் மட்டுமேயாகும் - அது தெய்வீக இயற்கைக்கு வளர்வதற்கான ஒரு முயற்சியாகும். அதனுடைய தூய்மையின் பகுதிகள், கடவுளுடைய இருப்பின் பிரிக்கமுடியாத தூய்மையையடைய ஒரு பேரார்வமாகும்; அதனுடைய உண்மை மற்றும் நேர்மையின் பகுதிகள், தெய்வீக அறிவு மற்றும் இச்சாசக்தியின் விதியுடன் உணர்வுள்ள ஐக்கியத்திற்கான ஒரு தேட்டமாகும், அதனுடைய இரக்கம் மற்றும் கொடையின் பகுதிகள் தெய்வீக அன்பின் வரம். பின்மை மற்றும் தெய்வத்தன்மையை நோக்கிய ஓர் இயக்கமாகும். அதனுடைய வலிமை மற்றும் ஆண்மையின் பகுதிகள் தெய்வீக வலிமை மற்றும் ஆற்றலின் ஒரு மேம்பாடாகும். அதுதான் அதனுடைய உண்மையான பொருளாகும். மனிதனின் ஜீவன் இந்த உருமாற்றத்தை அடையும் போதுதான், அதனுடைய உயர்ந்த நிறைவேற்றம் வருகிறது; அப்பொழுது அவனுடைய செயல்கள் அவனுடைய இயற்கையைத் தரப்படுத்துவதில்லை, ஆனால் அவனுடைய இயற்கையே அவனுடைய செயல்களுக்கு மதிப்பை அளிக்கிறது; அப்போது அவன் இனியும் கடும்முயற்சியுடன் நல்லவனாக, செயற்கையான முறையில் ஒழுக்கமுள்ளவனாக இருப்பதில்லை. ஆனால் இயற்கையாகவே தெய்வீகமாக இருக்கிறான். அவன் பகுத்தறிவினும் தாழ்ந்த உள்ளுந்துதல்கள் அல்லது பகுத்தறிவு புத்தியால் மற்றும் இச்சாக்தியால் வழிகாட்டப் பெறாத அல்லது இயக்கப்படாதபொழுது, ஆனால் அவனுடைய இயற்கையில் உணர்வுடனிருக்கும் தெய்வீக அறிவு மற்றும் இச்சாசக்தியால் அகவெழுச்சி பெற்று வழிகாட்டப் பெற்றால், செயல்திறனில் கூட அவன் நிறைவுறுகிறான் மற்றும் முழுமையாக்கப்படுகிறான். மேலும் முதற்கண் நேர்காணும் மனம் அகங்காரத்தின் முற்றுகையிலிருந்து, சுயநலத்திலிருந்து, ஆசையிலிருந்து, வெறியிலிருந்து மற்றும் அனைத்துவகையான சுய இச்சைகளிலிருந்து, தூய்மைப்படுத்திக் கொள்ளும்பொழுது, அதன் மூலமாக (நேர் காணல் மனத்தின் மூலமாக) இந்த விஷயங்களின் உண்மை அறிவுறுத்தப்படுவதாலும், இறுதியில் பகுத்தறிவு கடந்த ஒளி மற்றும் சக்தியின் மூலமாக, இனியும் அறிவுறுத்தப்படுவதாக அல்லாமல், அவனுடைய ஜீவனில் அவை இருப்புக் கொண்டிருப்பதாலும், அதை உடைமையாக்கிக் கொண்டிருப்பதாலும் மட்டுமே செய்து முடிக்க முடியும். அதுதான் பண்டை முனிவர்களின் மகோன்னதக் குறிக்கோளாக இருந்தது, அவர்களிடம் இருந்த அந்த மெய்யறிவைப் (wisdom) பகுத்தறிவு மனிதனும் பகுத்தறிவு சமுதாயமும் நிராகரித்தன, ஏனென்றால் அது, அவர்களுடைய பகுத்தறிவால் புரிந்துகொள்ள முடியாத அளவு மிக உயர்ந்ததாக, மற்றும் அவர்களுடைய வழக்கமான வரையறைக்குட்பட்ட மனித இச்சாசக்திகளுக்கு மட்டுமீறிய துணிச்சலாக மற்றும் மிகவும் அளப்பரிய எல்லை கடந்த முயற்சியாக இருந்தது.

ஆகவே நன்மையின் வழிபாடும், அழகின் வழிபாடு மற்றும் ஆன்மீகத்தின் வழிபாடு போலவே இருக்கிறது. அதனுடைய முதல் இயலறிவுகளில் கூட, அது ஏற்கெனவே தெய்வீகத்தின் மற்றும் முழுமையின் ஒரு தெளிவில்லாத தேடலாக இருக்கிறது; அது ஒரு முழுமையான திருப்திக்கு இலக்கு வைக்கிறது, அது பகுத்தறிவுக்கு அப்பாலுள்ள ஏதோ ஒன்றில் தன்னுடைய மிக உயர்ந்த ஒளியையும் வழிவகையையும் காண்கிறது, அது கடவுளைக் காணும் பொழுதே, அது மனிதனில் தெய்வீக உண்மையின் ஒரு வடிவத்தைப் படைக்கிற பொழுதே நிறைவுறுகிறது. பகுத்தறிவினும் தாழ்ந்த தொடக்கங்களிலிருந்து, பகுத்தறிவைச் சார்ந்திருப்பதை இடையில் கொண்டு, ஒரு பகுத்தறிவு கடந்த முழுமைக்கு எழும் நன்னெறி, மனிதனுடைய அழகுஉணர்வு மற்றும் மத ஜீவனைப் போலவே என்றுமுள உண்மையை நாடிச் செல்வதாகும்.

**16. வாழ்க்கையின் பகுத்தறிவு கடந்த கடைசி முடிவு**

மனிதன் தன்னுடைய வாழ்க்கையின் எல்லா மேம்பட்ட சக்திகளிலும் தட்டித் தடவிக் கடவுளைத் தேடிக்கொண்டு இருக்கிறான் என்று கூறலாம். தனக்குள்ளும் மற்றும் உலகத்திலும் இறைவனையும் என்றுமுளதையும் அடைதல், மேலும் அவற்றை இசைவித்தல், தன்னுடைய ஜீவனையும் வாழ்க்கையையும் எல்லையற்றதுடன் ஒத்திசையவைத்தல், இதுவே அவனுடைய இயற்கையின் இந்தப் பகுதிகளில், அவனுடைய மறைவியலான இலட்சியம் மற்றும் ஊழாக வெளிப்படுகிறது. அவன் தன்னுடைய மிக உன்னத மற்றும் அதிவிரிவான மற்றும் அதி முழுமையான ஆன்மாவை (self) அடையப் புறப்படுகிறான், மேலும் அவன் அதைத் தீண்டும் பொழுதே, அவனுள் உள்ள இந்தச் சிற்றான்மா உலகில் உண்மை, நன்மை, அழகு இவற்றின் ஏதோ ஒரு பெரிய ஆன்மாவுடன், பேரான்மாவுடன் ஒன்றாகத் தோன்றுகிறது. இதற்கே நாம் கடவுள் என்ற பெயரைக் கொடுத்திருக்கிறோம். அதை ஓர் ஆன்மீக இருப்பாக அடைவதே மதத்தின் குறிக்கோளாகும்; அதனுடைய நிரந்தரமான இயற்கையான ஒளி, அன்பு, வலிமை மற்றும் தூய்மையுடன் இசைவாவதற்கு வளர்வதே நன்னெறியின் இலட்சியமாக இருக்கிறது; அதனுடைய என்றுமுள அழகு மற்றும் ஆனந்தம் இவற்றின் ஒத்திசைவில் நம்மை உருவாக்கிக் கொள்வதும் ஆனந்திப்பதும் நமது அழகுணர்ச்சித் தேவையின் மற்றும் இயற்கையின் இலட்சியமும் முழுநிறைவுமாகும், அதனுடைய உண்மையின் நிரந்தரமான தத்துவங்களை அறிந்து அவற்றின்படி இருத்தலே விஞ்ஞானம் மற்றும் தத்துவ இயலின் முடிவு மற்றும் அறிவுக்கான நமது எல்லாத் தொடர்ந்த வற்புறுத்தல்களின் முடிவுமாகும்.

ஆனால் இவையனைத்தும் நம்முடைய இயல்பான மற்றும் வழக்கமான இருப்பிற்கு மேலே உள்ள ஏதோ ஒன்றுபோல் தோன்றுகிறது. நாம் வளர்த்துக்கொள்ள முயலும் ஏதோ ஒன்றாக அது இருக்கிறது, ஆனால் அது தனிமனிதன் மற்றும் சமுதாயத்தின் சாதாரண உணர்வுநிலை மற்றும் அவர்களுடைய அன்றாட வாழ்க்கையின் சகஜமான நிலையாக, இயற்கையான இருப்பாக அல்லது இயல்பான சூழ்நிலையாகத் தோன்றவில்லை. அந்த வாழ்க்கை நடைமுறை வாழ்க்கை, ஆதரிசமான வாழ்க்கை அல்ல. அது நன்மை, அழகு, ஆன்மீக அனுபவம், மேம்பட்ட உண்மை இவற்றைப் பற்றிக் கவலை கொள்வதில்லை, ஆனால் தனிப்பற்றுகள், தூலத்தேவைகள், விருப்பங்கள், பிராணத்தேவைகள் இவையே அதன் அக்கறை. இவையே அதற்குப் பிரத்யட்ச உண்மை, பிறஅனைத்தும் ஐயத்திற்கிடமானவை. *(தொடரும் .....)*

## ஆரோவில் விவசாயிகளின் ஊக்கமளிக்கும் செய்திகள்
(Positive news from Auroville Farmers)

சமீபத்திய பின்னடைவுகள், சவால்கள், அனைத்து எதிர்மறையான தன்மைகள் இருந்தபோதிலும், ஆரோவில் விவசாயிகளாகிய நாங்கள் எப்பொழுதும் செய்து வருவதையும், எங்களால் முடிந்தவரை செய்யக்கூடியதையும் தொடர்ந்து செய்கிறோம் - உள்ளூர் சுற்றுச்சூழல் அமைப்புக்கு ஆதரவளிக்கும் வழிகளில் ஆரோவில்லுக்கு ஆரோக்கியமான உணவைப் பயிரிடுவதைக் கொண்டாடும் வகையில் இந்த அறிக்கை உள்ளது.

கடந்த மாதம், ஆரோவில் விவசாயிகள் 3,128 கிலோ காய்கறிகள், 3,301 கிலோ பழங்கள் ஆகியவற்றை ஃபுட்லிங்கிற்கு அனுப்பியுள்ளனர், முக்கியமாக பிடிபிஎஸ், சோலார் கிச்சன் மூலம், கடந்த மாதம் அறுவடை செய்யப்பட்ட 46 வகையான காய்கறிகள், 24 வகையான பழங்கள் ஆரோவில் சமூகத்திற்கு விநியோகிக்கப்பட்டது. கூடுதலாக, கிட்டத்தட்ட 20,000 (19,764) முட்டைகள், 6,327 லிட்டர் பால், 846 கிலோ பல்வேறு வகையான அரிசி, 327 கிலோ பாலிஷ் செய்யப்பட்ட மற்றும் பாலிஷ் செய்யப்படாத வரகு (இது ஆரோவில்லில் இருந்து கொள்முதல் செய்யப்பட்டு, பதப்படுத்தப்பட்டது) ஆகியவை ஃபுட்லிங்கிற்கு அனுப்பப்பட்டது.

நமது இயற்கைச் சூழலுக்கும் நமது உடலுக்கும் பயனளிக்கும் விவசாய முறைகளைப் பயன்படுத்தி இந்த உணவுகள் அனைத்தும் எவ்வாறு உற்பத்தி செய்யப்பட்டன/வளர்க்கப்பட்டுள்ளன என்பதை நீங்கள் நினைக்கும்போது, தனித்தனியாகவும் கூட்டாகவும் நமக்கு ஏற்படும் நன்மைகள் இந்த உணவு கணக்கிடப்படும் நிதி அலகுகளுக்கு அப்பாற்பட்டவை. அடுத்த மாதம், ஆரோவில் பண்ணைகளில் இருந்து பிற சேனல்கள் மூலம் விநியோகிக்கப்படும் விளைபொருட்களையும் சேர்க்கலாம் என்று நம்புகிறோம், அவற்றில் சில எங்கள் பண்ணைகளில் இருந்து புதுச்சேரி மற்றும் அதற்கு அப்பால் ஆசீர்வாதங்களைப் பரப்புகின்றன.

ஆரோவில்லில் விளையும் பழங்கள் மற்றும் காய்கறிகளைப் பற்றி மேலும் அறிய விரும்பினால், இந்த டிஜிட்டல் புத்தகத்தை இலவசமாக பதிவிறக்கம் செய்யலாம்: https://tinyurl.com/3kxm9kx8

இசபெல் உருவாக்கிய ஆரோவில் பருவகால உணவு பற்றிய இந்த போஸ்டரையும் பதிவிறக்கலாம் https://tinyurl.com/3m5pvyd8

ஆரோவில்லில் உள்ள உணவு உலகம் முழுவதையும் ஆராய, அது எவ்வாறு வளர்க்கப்படுகிறது என்பது மட்டுமல்லாமல், இந்த பன்னாட்டு நகரத்தில் அதன் கலாச்சார அர்த்தத்தையும் உள்ளடக்கியது, தயவுசெய்து இசபெல்லின் புதிய இணையதளத்தைப் பார்வையிடவும்: https://foodpathsauroville.com

உங்களிடம் ஏதேனும் கருத்து அல்லது கேள்விகள் இருந்தால், நீங்கள் எங்களிடம் கேட்க விரும்பினால், தயவுசெய்து எங்களை aurovillefarmers@gmail.com-இல் தொடர்பு கொள்ளவும்.

*பிரியா மற்றும் அனைத்து ஆரோவில் விவசாயிகளால் அனுப்பப்பட்டது.*

---

## பிசிசி நிலுவைத் தொகை மீட்டெடுப்பு குறித்த அறிக்கை (BCC Recovery Report)

31.03.2023 வரையிலான அனைத்து நிலுவைத் தொகைகளையும் 31.03.2024ஆம் தேதிக்குள் வசூலிக்குமாறு பிசிசி குழுவிற்கு இந்திய சி&ஏஜி அறிவுறுத்தியது. சிஓசி2017 உடன் இணக்கமாக இல்லாதது குறித்தும், முன்னதாக பெரிய அளவில் நிலுவைத் தொகைகள் இருப்பு குறித்தும் (நிலுவைத் தொகையை செலுத்தாததற்காக மாதத்திற்கு 1% கூடுதல் பங்களிப்பு வசூலிப்பது குறித்தும் கேள்விகள் எழுப்பப்பட்டது)!

இந்த நடைமுறைப்படுத்துதலுக்கு ஒத்துழைத்த அனைவருக்கும் எங்களது மனமார்ந்த நன்றியை தெரிவித்துக் கொள்கிறோம். எங்களைத் தொடர்பு கொண்டவர்கள் அனைவரும் (கட்டணம் செலுத்த பணம் இல்லை என்று சொல்வதற்கு கூட!) ஏனெனில் "செலுத்த இயலாமை" என்ற தகவல்தொடர்பு "பணம் செலுத்த விருப்பமின்மை மற்றும் தகவல்தொடர்பு இல்லாமை" ஆகியவற்றிலிருந்து தனித்தனியாக நிச்சயமாக குறிப்பிடப்பட்டுள்ளது.

சில யூனிட்டுகள் (நிறுவனங்கள்)/ சேவைகள்/ செயல்பாடுகள் இந்தச் செயல்முறையின் தொடக்கத்திலிருந்து மூடப்பட்டுவிட்டன (தொடர்ந்து மூடப்படுகின்றன) அத்துடன் அவற்றின் நிலுவைத் தொகைகள் செலுத்தப்படாமல் உள்ளன, ஏனெனில், அவை செலுத்த இயலாமையை வெளிப்படுத்தி தங்கள் செயல்பாடுகளைத் தொடர விரும்புகின்றன அல்லது எதையும் வெளிப்படுத்தவில்லை. .
.

சில யூனிட்டுகள் (நிறுவனங்கள்)/சேவைகள்/செயல்பாடுகள் தொடர் பரிமாற்றத்தைச் செய்யத் தொடங்கியுள்ளன..

சில சமயங்களில் பணம் வேறொரு சேவை/ யூனிட்டுக்கு மாற்றப்பட்டது, ஆனால் பிசிசிக்கு மாற்றப்படவில்லை, மேலும் இது குறித்து ஆடிட்டர்கள் கருத்தை நாங்கள் கேட்டுள்ளோம்.

வரும் ஆண்டுகளில் இதுபோன்ற பயிற்சி தேவைப்படாமல் போகலாம். "முந்தைய நிலுவைத் தொகைகளை" இவ்வாறு மொத்தமாக வைத்திருக்க அனுமதிக்கப்பட மாட்டாது, இது போன்று பெரிய அளவில் நமக்கு நிதி வராது என்பதையும் தெளிவாக புரிந்துகொள்ள வேண்டும்.
நாங்கள் இப்போது முடித்திருக்கும் “பங்களிப்புத்தொகை மீட்டெடுப்பு” பற்றிய தகவல் இங்கே உள்ளது, இது எஃப்ஏஎம்சிக்கு சமர்ப்பிக்கப்பட்டு, ஆரோவில் பவுண்டேஷன் செயலாளரின் அலுவலகத்திடம் ஒப்படைக்கப்படும். தேவைப்பட்டால், அவர்கள் மூலம் மேலும் நடவடிக்கை எடுக்கப்படும். பின்வரும் புள்ளிவிவரங்கள் 2023-இன் இறுதி வரையிலான நிலுவைத் தொகையாகும். (மற்றும் சில 2013 இலிருந்து செலுத்தப்பட வேண்டியவை):

1. வசூலிக்கப்பட்ட மொத்த நிலுவைத் தொகைகள் (சில யூனிட்டுகள் முழு நிலுவைத் தொகையையும் மற்றவை பகுதி நிலுவைத் தொகையையும் செலுத்தியுள்ளன. இந்த அம்சம் தரவுத்தளத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது, ஆனால் இந்த அறிக்கையில் குறிப்பிடப்படவில்லை): **ரூ. 748.15 இலட்சம்.**

2. தவறான கணக்கீடு (இது செலுத்த வேண்டிய தொகையை இரத்து செய்யாமல் தவறான நன்கொடை விகிதத்தைப் பயன்படுத்துதல் அல்லது நன்கொடை விகிதத்தில் திடீர் மாற்றம் அல்லது இருப்புநிலைக் குறிப்பில் தெளிவின்மை அல்லது உண்மையான தவறான கணக்கீடு ஆகியவை காரணமாக இருக்கலாம்): **ரூ. 95.40 இலட்சம்.**
3. வாராக் கடன்கள் அல்லது வசூலிக்க முடியாதவை: **ரூ 212.95 இலட்சம்**
4. தள்ளுபடி கோரிக்கைகள்/பதில் பெறப்படாதவை (தரவுத்தளத்தில் பிரிக்கப்பட்டுள்ளது. ஆனால் இந்த அறிக்கையில் கஅல்ல): **ரூ 67.32 இலட்சம்.**

அறக்கட்டளைகளின் (அகரவரிசைப்படி) தரவு பின்வருமாறு: (தொகை இலட்சங்களில்)

| அறக்கட்டளை | நிலுவை வசூல்தொகை | தவறான கணக்கீடு | மோசமான கடன் / திரும்பப் பெற முடியாதது | தள்ளுபடி கோரிக்கை / பதிலளிக்கவில்லை |
|---|---|---|---|---|
| ஏபிசி | 13.62 | 0.76 | - | 6.72 |
| ஏடிபிஎஸ் | 10.75 | - | - | - |
| ஆல்டெக்ஸ் | 170.24 | - | - | - |
| ஆங்குர் | 0.20 | | | |
| அரவிந்த் | 10.69 | | | |
| ஆர்ட்டிஸனா | 86.22 | 4.13 | 6.07 | 3.89 |
| எஃப்ஏ/ ஆர்ட்டிஸனா | 0.87 | 0.50 | 0.52 | 5.73 |
| ஏஎஸ்எஸ்ஏ/ ஆர்ட்டிஸனா | 7.10 | - | 9.11 | 10.22 |
| ஆரோவில் பவுண்டேஷன் | 3.04 | 5.19 | 11.61 | - |
| ஆரோமிக்ஸ் | 0.40 | 18.25 | - | 0.19 |
| ஆரோமோட் | 4.40 | - | 19.63 | 0.95 |
| அரோர் | 0.95 டிடிஎஸ் திரும்பப் பெறுதல் மட்டுமே | - | - | 9.59 |
| ஆரோசர்ஜன் | 0.36 | | | |
| பாரத் நிவாஸ் | - | - | 22.21 | - |
| சிஎஸ்ஆர் | 8.08 | - | 37.11 | - |
| டிஸ்கவரி | 0.006 | - | - | - |
| எக்ஸ்போர்ட் டிரஸ்ட் | 14.24 | 5.98 | - | 0.29 |
| ஃபிளேர் | 0.07 | - | - | - |
| ஃப்ரீ ஃப்ளோ | 67.63 | - | 14.5 | - |
| ஜிஎன்பி | 1.20 | - | - | - |
| கெஸ்ட் அவுஸ் | 8.69 | - | 26.23 எக்ஸ்ப்ளோரேஷன் ஜிஎச் | 1.60 |
| ஹெலத் & ஹீலிங் | 22.42 | - | - | - |
| ஹாஸ்பிட்டாலிட்டி | 14.42 | 5.78 | - | - |
| இன்சைட் | 0.02 | - | 0.68 | - |
| கல்கி | 0.38 | - | - | - |
| கேகேடி | 121.14 | 9.47 | 16.60 | 13.65 |
| ஏவிஏ / கேகேடி | 20.04 | 2.83 | 0.76 | 6.80 |
| New Engineering | - | - | 2.06 | - |
| சேவை | 14.11 | 19.32 | 43.85 | 2.42 |
| ஸ்வாகதம் | 109.17 | 0.83 | 0.83 | 4.12 |
| டைம் | 26.66 | - | 1.17 | 0.78 |
| டூஜோர்ஸ் மியூக்ஸ் | 12.05 | - | - | - |
| | | | | |

## நிதியாண்டு 2023-24-இன் சுருக்கமான அறிக்கை (EXECUTIVE SUMMARY OF REPORT (FY' 23-24)

2023-24 நிதியாண்டு பிசிசி அலுவலகம் அதன் அனைத்து நிதி பரிவர்த்தனைகளுக்கும் பின்பற்றிய நிலையான செயல்பாட்டு நடைமுறைகள் மற்றும் கொள்கைகளை கேள்விக்குள்ளாக்கியது. இவை உள் தணிக்கையாளர்களால் ஆய்வு செய்யப்படுகின்றன.

கன்ட்ரோலர் & அக்கவுண்ட் ஜெனரல் (சி&ஏஜி) பிசிசி தொடர்பான நிதிச்சேவை கணக்குகள், நடைமுறைகள் மற்றும் கொள்கைள் குறித்து தணிக்கையை நடத்தினார். முக்கியமாக, சேவை யூனிட்டுகளுக்குச் (நிறுவனங்களுக்குச்) செய்யப்படும் அனைத்துக் கொடுப்பனவுகளும், ஃபர்தரென்ஸ் யூனிட்களில் (நிறுவனங்களில்) வசூலிக்கப்பட்ட வருமானமும் இதில் அடங்கும்.

கடந்த 10 ஆண்டுகளில் நகரச்சேவையின் சில யூனிட்டுகள் உரிய நேரத்தில் அவற்றின் பங்களிப்புத்தொகையை பரிமாற்றம் செய்யத் தவறியதாக சிஏஜி பதிவு செய்தது. ஆரோவில் பவுண்டேஷன் மற்றும் நிதி மற்றும் சொத்துகள் மேலாண்மைக் குழுவால் அங்கீகரிக்கப்பட்ட நடத்தை விதிகளின்படி, யூனிட்டுகள் "அடுத்த நிதியாண்டின் ஜூன் 30க்குள் பங்களிப்புத்தொகையைச்" செலுத்த வேண்டும். "செப்டம்பர் 1ஆம் தேதிக்குள் செலுத்தப்படாத நிலுவைத் தொகைகளுடன் கூடுதலாக மாதத்திற்கு 1% செலுத்தவேண்டும்".

பிசிசி குழு கடந்த பத்து ஆண்டுகளாக நிலுவையில் உள்ள பங்களிப்புத்தொகைகளைப் பெறுவதற்கு, நிலுவையில் உள்ள நகரச் சேவை பங்களிப்புத்தொகைகளை கண்டறிய கடந்த பத்து ஆண்டுகளாக பல்வேறு வடிவங்களில் கிடைக்கப்பெற்ற இருப்புநிலைக் கணக்குகளில் இருந்து கணக்கீடுகளை ஆராய்வதன் மூலம் மகத்தான முயற்சியை மேற்கொண்டது.

இந்த அறிக்கையின் மொத்த வசூல் வருமானம் எண்ணிக்கை கடந்த 10 ஆண்டுகளில் நிலுவையில் உள்ள அனைத்து பங்களிப்புத்தொகைகளையும் குறிக்கிறது. 2022-23ஆம் நிதியாண்டில் பெறப்பட்ட மொத்த வருமானம் ரூ.30.02 கோடி ஆகும்.

வழங்கப்பட்ட மொத்தப் பணம் 25.65 கோடி, இதில் வழங்கப்பட்ட மொத்த பராமரிப்புத்தொகை 17.55 கோடி. தொடர் பட்ஜெட் 6.42 கோடி (இது தவிர தொடர்வில்லாத செலவுகள் மற்றும் பிற செலவுகள் வழங்கப்பட்டன).

2022-23 நிதியாண்டில், நகரச் சேவைகள் இருப்புத்தொகை ரூ.10.26 கோடியில் இருந்து 28% குறைந்து ரூ.7.35 கோடியாக இருந்தது. 2023-24 நிதியாண்டில், நகரச் சேவைகள் இருப்புத்தொகை 57% உயர்ந்தது, இதன் மூலம் 16,85% வசூல் அதிகரித்தது, எஃப்ஏஎம்சியும் பிசிசியும் இயக்கங்களை மதிப்பாய்வு செய்த பிறகு, (முந்தைய ஆண்டு மொத்தத்துடன் ஒப்பிடும்போது) மொத்த கொடுப்பனவுகளில் 9% குறைக்கப்பட்டது.

பிசிசியின் வரலாற்றில் நகரச்சேவைகள் ஆதரவு யூனிட்டுக்கான இருப்புநிலை அறிக்கை தயாரிக்கப்பட்டது, மேலும் ஆரோவில் பவுண்டேஷனுக்கு சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்களில் நிர்வாகிகள் கையொப்பமிடுமாறு கேட்டுக் கொள்ளப்பட்டது.

ஒவ்வொரு யூனிட்டின் செயல்பாடும் பவுண்டேஷனின் கீழ் பதிவு செய்யப்பட வேண்டும் என்று ஆடிட்டர்கள் சுட்டிக்காட்டினர். பிசிசி அலுவலகம் யூனிட்டின் கணக்குகளை பதிவு செய்யும் குடையாக இருக்க முடியாது. அது தொடர்புடைய அறக்கட்டளையின் கீழ் அத்தகைய யூனிட்டுகளை பதிவு செய்யும் பணிக்கு பிசிசி முன்னுரிமை அளிக்கும். அவற்றில் ஒன்று ஆரோவில் ஹெல்த் ஃபண்ட் எந்த அறக்கட்டளையின் கீழும் பதிவு செய்யப்படவில்லை. இதற்கான செயல்முறை தொடங்கப்பட்டுள்ளது. ஆரோவில் ஹெல்த் ஃபண்ட் விரைவில் ஹெல்த் அண்ட் ஹீலிங் அறக்கட்டளையின் கீழ் பதிவு செய்யப்படும்.

பிசிசி தற்போதைய அமைப்புமுறையில் தரவுத் துல்லியம், நம்பகத்தன்மை குறைந்தது, செயல்முறைகளில் செயல்திறனைக் கொண்டுவருவதில் அதிக தடையாக உள்ளது. இச்சவாலை வெற்றிகொள்ள, ஆரோவில் பவுண்டேஷன் மற்றும் எஃப்ஏஎம்சி ஆகியவை ஏவிஜசிஏஎஸ் கணக்குப்பதிவை அறிமுகப்படுத்தி உள்ளது, இது எதிர்காலத்தில் தற்போதைய சவால்களுக்கு தீர்வைக் காணும்.

ஆரோவில் ஒருங்கிணைந்த தகவல் சேவை (ஏஐஐஎஸ்) (Auroville Integrated Information Services (AIIS) ஆதரவுடன், பிசிசி இந்தியர்கள் அல்லாதவர்களுக்கான விசா விண்ணப்பத்தைப் பின்பற்றுவதற்கும், "நிலுவைத் தொகை இல்லை" சான்றிதழை வழங்குவது தொடர்பான நடவடிக்கைகளுக்கும் ஆன்லைன் வலைத்தளத்தில் வேலை செய்யத் தொடங்கியது. இந்த போர்ட்டலின் பயனர்கள் ஆரோவில் பவுண்டேஷன், செயற்குழு, பிசிசி அலுவலகம் ஆகும். இது விசா வழங்கும் செயல்பாட்டில் வெளிப்படைத்தன்மையையும் செயல்திறனையும் கொண்டுவருகிறது.

குழந்தைகளைப் பராமரிக்கும் பெற்றோர்களின் ஆதாரத் தகவல்களைச் சேகரிக்கும் முயற்சி மேற்கொள்ளப்பட்டுள்ளது. அடிக்கடியும், பல நினைவூட்டல்களை அனுப்பிய பிறகும் 67 பெற்றோர்கள் தங்கள் தகவலைச் சமர்ப்பிக்கவில்லை.

சில்வர் ஃபண்ட் கொள்கையை செயல்படுத்துவது சமூகம் அல்லது நிதி மற்றும் சொத்து மேலாண்மைக் குழுவால் ஒருபோதும் அங்கீகரிக்கப்படவில்லை என்பதை பிசிசி கவனித்தது. இந்த காரணத்திற்காக பிசிசி இந்த பட்ஜெட் தலைப்பின் கீழ் புதிய பதிவுகளை நிறுத்த வேண்டியிருந்தது. இந்த நிதி உதவியைப் பெறுபவர்கள் தங்கள் அடிப்படைத் தகவலைப் பதிவு நோக்கத்திற்காக பிசிசியிடம் பகிர்ந்து கொள்ளுமாறு கேட்டுக் கொண்டது. மொத்தம் 97 பெரியவர்கள் சில்வர் பண்ட் பராமரிப்புத்தொகையைப் பெறுகின்றனர். சில்வர் ஃபண்ட் இலிருந்து நிதி உதவியைப் பெறும் 31 பேரிடம் இருந்து பிசிசிக்கு தகவல் வரவில்லை.

இந்த செயல்முறையில் ஒத்துழைக்காத நபர்களின் விவரங்களை எஃப்ஏஎம்சியுடன் பிசிசி பகிர்ந்து கொண்டது. மூத்தகுடிமக்கள் ஆதரவு மற்றும் அதற்கான சரியான கொள்கையின் முழு விஷயம் குறித்த வரைவு மதிப்பாய்வும், இறுதி மதிப்பாய்வு மற்றும் எஃப்ஏஎம்சி ஒப்புதல், நிர்வாகப் பேரவையின் (கவர்னிங் போர்டு) ஒப்புதல் ஆகியவை நிலுவையில் உள்ளது.

பண்ணைகள், காடுகள் ஆகியவற்றின் உற்பத்தித்திறன் மற்றும் செயல்திறன் குறித்து எஃப்ஏஎம்சி கேள்விகளை எழுப்பியது. பண்ணைகள், காடுகள் ஆகிய இரண்டும் வணிக நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளன. பண்ணைகளுக்கும் எஃப்ஏஎம்சிக்கும் இடையே முழுமையான உணவு மற்றும் பசுமைத் தாங்கல் பிரிவு வேலைத் திட்டம் தெளிவாகவும், பரஸ்பரம் ஒப்புக்கொள்ளப்படும் வரை பண்ணைகள் மற்றும் வனப்பகுதிகளில் பணிபுரியும் நபர்களுக்கான பராமரிப்பு பேக்கேஜை விடுவிக்குமாறு பிசிசி கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது.

எஃப்ஏஎம்சி, சையர் உடன் இணைந்து சையர் மேற்பார்வையின் கீழ் துணை யூனிட்டுகளுக்கு வழங்கப்பட்ட பட்ஜெட்டுகளை மதிப்பாய்வு செய்து மறுவேலை செய்ய கூட்டு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. வழக்கமான செயல்பாட்டு பட்ஜெட்டு தேவைப்படும் அதே நேரத்தில் சொத்துக்கள் குறைவாகப் பயன்படுத்தப்பட்ட சில யூனிட்டுகளை ஒன்றிணைக்க அல்லது மூடுவதற்கான ஒரு பரிந்துரை இருந்தது. இந்த மாற்றங்கள் அடுத்த கல்வியாண்டின் தொடக்கத்தில் அமல்படுத்தப்படும்.

ஆரோவில் பல்மருத்துவ மையம், ஆரோவில் ஹெல்த் சர்வீஸ் ஆகியவற்றுக்கு ஆரோவில்வாசிகளுக்கு அவர்கள் அளித்துவரும் சேவைகளுக்காக வழக்கமான மாதாந்திர பணம் வழங்கப்பட்டது. இந்தியர்கள் அல்லாதவர்களுக்கான விசா விண்ணப்பக் கட்டணத்திற்கான செலவினங்களை பிசிசி தொடர்ந்து திருப்பிச் செலுத்துகிறது.

கல்விப் பிரிவு மற்றும் சுகாதாரத் துறைக்கான பட்ஜெட்டை மறுசீரமைப்பது வரும் நிதியாண்டில் மிகுந்த முக்கியத்துவம் வாய்ந்ததாக இருக்கும்.

ஸ்ரீ அன்னை எப்போதும் கர்ம யோகத்தை வலியுறுத்தினார். தனிநபர்கள் தங்கள் வீடு, தனிப்பட்ட தேவைகள், குழந்தைகள் போன்றவற்றைக் கவனித்துக்கொள்வதைத் தவிர சாதனாவாக முழுநேர வேலையில் ஈடுபட வேண்டும். பிசிசி கூர்ந்து கவனித்தபடி, மக்கள் பாதி நேரம் மட்டுமே வேலை செய்கிறார்கள். இந்த கலாச்சாரம் குறைந்தபட்ச செயல்திறனின் கீழ் யூனிட்டுகளுக்கு வழிவகுக்கிறது, மேலும் வளர்ச்சி மற்றும் முன்னேற்றம் புதிய உலகத்தை பிரதிநிதித்துவப்படுத்தக்கூடிய தரத்திற்கு இணையாக இல்லை. வரும் காலத்தில் பிசிசி ஒரு கொள்கை மற்றும் செயல்முறையை பரிந்துரைக்கும், அதில் ஒவ்வொரு நபரும் முழுநேர வேலை மூலம் ஆரோவில்லுக்கான சேவையின் ஒரு பகுதியாக இருக்க வேண்டும்.

கர்ம யோகாவின் உணர்வில் செய்ய வேண்டிய வேலை மற்றும் வேலையின் மீதான நேர்மையை வெளிப்படுத்துவதற்கு ஆரோவில் உலகிற்கு ஒரு உதாரணமாக இருக்க வேண்டும். பணிக் கலாச்சாரத்தில் இதுவரை பொறுப்புக்கூறல் மற்றும் பொறுப்புடைமை காணப்படவில்லை என்பதை பிசிசி கவனித்தது, மேலும் இது பல்வேறு பராமரிப்புப் பிரிவுகளின் எண்ணிக்கையை உருவாக்க வழிவகுத்தது, அங்கு தனிநபர்கள் வேலையின் மூலம் எந்தவித பங்களிப்பும் இல்லாமல் ஆதரிக்கப்பட்டனர், அத்துடன் அது ஒருபோதும் கேள்வி கேட்கப்படவில்லை. உண்மைக்கு சேவை செய்யும் மனப்பான்மையுடன் செயல்பாட்டில் பொறுப்புக்கூறல் மற்றும் வெளிப்படைத்தன்மையைக் கொண்டுவர பிசிசி விரும்புகிறது.

குறிப்பு - *நகரச் சேவைகளின் 2023-24 நிதியாண்டுக்கான பங்களிப்புத்தொகைகள் மற்றும் கொடுப்பனவுகள் பற்றிய முழுவிவரத்திற்கு நியூஸ் அண்ட் நோட்ஸ் ஆங்கிலச் செய்தியைப் பார்க்கவும்.*

---

## அறிவிப்புகள் (Announcements)

**மல்டி மீடியா சென்டர் அரங்கம் (எம்எம்சி, டவுன் ஹால்)**
(MULTI MEDIA CENTRE AUDITORIUM (MMC, Town Hall)

**நினைவூட்டல்: மே 3 வெள்ளிக்கிழமை** - **"குட் வில் ஹன்டிங்" ("GOOD WILL HUNTING" ).**
இயக்கம் - **கஸ் வான் சாண்ட்**, யுஎஸ், 1997.

**மே 10 வெள்ளிக்கிழமை இரவு 8 மணிக்கு** - **"எ வுமன் ஆஃப் பாரிஸ்" ("A WOMAN OF PARIS",")**, யுஎஸ், 1923.
*நடிப்பு* - எட்னா பர்வியன்ஸ், கார்ல் மில்லர், லிடியா நாட், அடோல்ஃப் மென்ஜோ
எ வுமன் ஆஃப் பாரிஸ், 1923-இல் வெளிவந்த ஊமைத் திரைப்படம் ஆகும். இதை சார்லஸ் சாப்ளின் எழுதி, இயக்கி, இசை அமைத்துள்ளார்; மேலும் அவர் நடிகராகத் தோன்றாத முதல் படம்!
*ஊமைத் திரைப்படம், ஆங்கிலத் இணைத்தலைப்புகளுடன்- காலம்: 1 மணிநேரம் 18 நிமிடம்.*

---

**வெரிட்டி நிகழ்வுகளுக்கு கோடை விடுமுறை:** (Vérité Programming Summer Break:)

01.05.2024 முதல் வெரிட்டியின் அனைத்து நிகழ்வுகள் மற்றும் செயல்பாடுகள் (வகுப்புகள், பட்டறைகள், தெரபிகள்) மூடப்படும். 01.06.2024 அன்று மீண்டும் தொடங்குவோம் என எதிர்பார்க்கிறோம்.

2024 ஜூன் திட்டத்தில் சேர்ப்பதற்கான முன்மொழிவுகளை நாங்கள் வரவேற்கிறோம். 10.05.2024 -க்குள் அவற்றைச் சமர்ப்பிக்கவும்.
கோடைக்காலம் மிகவும் மகிழ்ச்சியானதாக அமைய வாழ்த்துகிறோம்.
வெரிட்டி நிகழ்வுகள்.

தொடர்புக்கு - *0413 2622045, 2622606, 9363624083 அல்லது* programming@verite.in, www.verite.in
*வெரிட்டி நிகழ்ச்சி ஏற்பாட்டாளர் குழு*

---

**ட்ரீம்வீவிங் - 2024-க்கான சமூக தொலைநோக்கு வாரியம்: பில்ட் டு என்விஷன்**
(Community Vision Board for Dreamweaving 2024: Build to Envision)

அன்பார்ந்த குடியிருப்புவாசிகளுக்கு,
சோலார் கிச்சன்/பிடிடிசி/ஃபுட் லிங் பகுதியை மேம்படுத்துவதற்கான உங்கள் யோசனைகளை வரவேற்கிறோம்! இப்பகுதியில் எவ்விதமான சமூகத்தினர் கூடும் இடம், சேவைகள், செயல்பாடுகள் ஆகியவை எத்தகைய தரத்துடன் அமைய வேண்டும் என்று நீங்கள் விரும்புகிறீர்கள்? ஏற்கனவே அங்கு என்ன உள்ளது, அங்கு என்ன இல்லை? எவ்வித யதார்த்த வளர்ச்சிகள் உங்களின் மிக முக்கியமான தேவைகளையும் விருப்பங்களையும் பூர்த்தி செய்யும்?

ட்ரீம்வீவிங் திட்டம் 2024: பில்ட் டு என்விஷன் (வருங்காலத்தில் எப்படி இருக்கவேண்டும் என்பதைக் கற்பனை செய்துபார்த்தல்) வீவிங் செயல்முறை மூலம் குடியிருப்பாளர்கள், வடிவமைப்பாளர்கள், கட்டிடக்கலைஞர்கள் ஆகியோரின் யோசனைகள், திறன்களுடன் இணைந்து உருவாக்கப்பட்ட பல்வேறு இடங்கள், செயல்பாடுகளை இணைப்பதன் மூலம் அப்பகுதியில் வாழும் நகர்ப்புற மாதிரியை உருவாக்குவது இவற்றின் நோக்கமாகும்.
முதற்படியாக உங்கள் யோசனைகளை சேகரித்தல்!

**எப்போது: மே 2, 3, 4, ஆகிய தேதியில் காலை 11:30 - பிற்பகல் 2:30 மணி வரை. எங்கே: சோலார் கிச்சன்**

உங்களின் யோசனைகளையும், கருத்துகளையும் தெரிவிக்க வாருங்கள்! வாழ்த்துகள், *ட்ரீம்வீவிங் முன்முயற்சி குழு*

---

Savitri BHAVAN



## கனவு தெய்வீகம் தொடர்

(Dream Divine Series)

குறிப்பாக புதிதாய்ச்சேர்ந்தவர்களுக்கு (நியூகம்மர்) வழிகாட்டுவதற்கு **கனவு தெய்வீகம் தொடர்** ('டிரீம் டிவைன் சீரிஸ்') என்ற திட்டத்தை சாவித்ரி பவன் அறிமுகப்படுத்தியுள்ளது. ஆரோவில்லின் நோக்கங்களையும் இலட்சியங்களையும் புதிதாய்ச்சேர்ந்தவர்கள் (நியூகம்மர்) புரிந்துகொள்வதும், ஸ்ரீ அரவிந்தர், ஸ்ரீ அன்னை ஆகியோரின் வாழ்க்கை மற்றும் படைப்புகள், பூரண யோகம் ஆகியன பற்றி அறிந்து கொள்வதும், இத்திட்டத்தின் குறிக்கோள் ஆகும். புதன்கிழமைதோறும் மாலை 4.30-5.30 மணிக்கு வாராந்திர அமர்வு நடைபெறும். இந்தத் தொடரில் விளக்கக்காட்சிகள், திரைப்படங்கள், உரைகள் போன்றவை அடங்கும், அதைத் தொடர்ந்து கேள்விகள், பதில்கள் அமர்வு.

**மே 8 புதன்கிழமை அன்று, மாலை 4:30 - 5:30 மணிக்கு,**
**"Auroville – A Dream of the Divine" – (ஆரோவில் – இறைவனின் கனவு) - ஆவணப்படம்**
**சாவித்ரி பவனில் உள்ள சங்கம் ஹால்**
அனைவரும் வருக.

---



## பாரத் நிவாஸ், ஆரோதன் பாண்டிச்சேரி ஆகியவை இணைந்து வழங்கும்

(Bharat Nivas in colloboration with Aurodhan pondicherry presents)

**Uniting With Inner Movements (உள் இயக்கங்களுடன் ஐக்கியமாதல்)**

**ராஜேஷ் வைத்யா** அவர்களின் வீணை இசைக்கச்சேரி
தற்கால வீணை கலைத்திறனின் கலங்கரை விளக்காகவும், பாரம்பரியம் மற்றும் புதுமை ஆகிய கலவையின் உருவகமாகவும் திகழ்பவர். வளமான ஒத்துழைப்பு, சாதனை நிகழ்ச்சிகளால் நிரம்பிய அவரது பயணம் உலகளாவிய பார்வையாளர்களை கவர்ந்திழுக்கிறது.

**11.05.2024 அன்று இரவு 7 மணி, ஸ்ரீ அரவிந்தர் அரங்கம், பாரத் நிவாஸ்**

*தொடர்புக்கு: கிருஷ்ணா +91 97878 80211.*
*பாரத் நிவாஸ் மெயின் கேட் வெளியே வாகனம் நிறுத்தும் வசதி உள்ளது*

---

## ஆரோவில் பவுண்டேஷனின் அறிவிப்பு (Announcement from Auroville Foundation)

ஆரோவில் பவுண்டேஷன் பல்வேறு துறைகளின் கீழ் ஆரோவில் பெல்லோஷிப் திட்டத்திற்கு (Auroville Fellowship Program) அனுபவம் வாய்ந்த விண்ணப்பதாரர்களின் விண்ணப்பங்களை வரவேற்கிறது. இளம் ஆர்வலர்கள் ஆரோவில்லுடன் ஈடுபடுவதற்கும் நகரத்தின் இலக்குகளை அடைய பங்களிப்பதற்கும் 30 காலியிடங்கள் உள்ளன.

ஆர்வமுள்ள விண்ணப்பதாரர்கள் இந்த விளம்பரத்தின் இன்னும் விரிவான விவரத்திற்கும், ஆன்லைன் விண்ணப்பப் படிவத்திற்கும் எங்கள் வலைத்தளத்தை பார்வையிடலாம் - https://aurovillefoundation.org.in/
நன்றி & அன்புடன், *டொமினிக் சிஸ்டம் அட்மினிஸ்டேட்டர், ஆரோவில் பவுண்டேஷன்.*

---

## டிராப்ஸி (Dropzy)



டிராப்ஸி என்பது ஆரோவில் உணவகங்கள், மளிகைக் கடைகள், பேக்கர்கள், பண்ணைகள், சிகிச்சையாளர்கள், தொழில் வல்லுநர்கள் போன்ற பல வகைப்பட்டவர்களிடம் ஆர்டர் செய்வதற்கும் தகவல்களை அணுகுவதற்கும் ஒரு பல்நோக்கு மொபைல் ஆப் தளமாகும். டிராப்ஸி டெலிவரி பணியாளர்கள் விற்பனை நிலையங்கள்/கடைகளில் இருந்து ஆர்டர்களை எடுப்பார்கள்; வாடிக்கையாளர்களுக்கு அவர்களின் வீட்டு வாசலுக்கு வந்தும், அவர்களின் வசதிக்கேற்பவும் அவற்றை வழங்குவார்கள்.

ஆரோவில் மற்றும் அதைச் சுற்றியுள்ள விற்பனை நிலையங்களை ஆதரிக்கும் ஆர்டர்களை வழங்கவும், உங்கள் தேவைகளுக்குத் தொடர்புடைய தகவல்களைக் கண்டறியவும் இந்த மொபைல் ஆப்பைப் பதிவிறக்கவும்.

மேலும் புதிய தகவல்கள், எங்கள் அறிவிப்புகளுக்கு இந்த ஆப்பில் தொடர்ந்து இணைந்திருங்கள்.
வாழ்த்துகள், சதீஷ் ஆறுமுகம், டிராப்ஸி சார்பில். மொபைல்: +91 8098144686. www.dropzy.in